# இராமநாதபுரம் நகராட்சி

இராமநாதபுரம் நகராட்சியில் 2023 ஜீலை மாதத்திற்கான நகர்மன்ற சாதாரணக்கூட்டம் 28.07.2023ந் தேதி வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு நகர்மன்றத்தலைவர் இராமநாதபுரம் நகராட்சி அவர்களின் தலைமையில் நடைப்பெற்ற ஆய்வுக்கூட்ட நடவடிக்கைகள்:–

| | | |
|---|---|---|
| 1 | **நகர்மன்றத் தலைவர் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்**<br>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட நகர்மன்றத் தலைவர், நகர்மன்றத் துணை தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்களுக்கு மாதந்தோறும் மதிப்பூதியம் வழங்கிட அரசாணை எண்.98, நாள்:13.07.2023–ன் படி வெளியிட்டுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இம்மன்றத்தின் சார்பாக நன்றி தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. | தீர்மான எண்–620<br>ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. |
| 2 | **17,18, மற்றும் 29வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்**<br>இராமநாதபுரம் நகராட்சிக்குட்பட்ட நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையம் வார சந்தை இடத்தினை சேர்த்து கட்டப்படுவதால், வார சந்தை ரத்து செய்யப்பட்டுள்ளது. பொதுமக்களின் நலன் கருதியும், நகராட்சியின் வருவாய் கருதியும் இராமநாதபுரம் நகராட்சிக்குட்பட்ட அண்ணா சிலையில் இருந்து உழவர் சந்தை வரை வார சந்தை வாரம் ஒரு நாள் புதன் கிழமை மட்டும் வைத்து நடத்திட அனுமதி வேண்டி நகர்மன்றத்தின் சார்பாக கேட்டுக் கொள்ளப்படுகிறது. | தீர்மான எண்–621<br>மன்றம் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.<br>தீ |
| பொருள் எண்..1 | இராமநாதபுரம் நகராட்சி ஆணையாளர் ஜீன் 2023–க்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு – மன்றம் பதிவு செய்யலாம். | தீர்மான எண்–622<br>பதிவு செய்யப்பட்டது. |
| பொருள் எண்..2 | இராமநாதபுரம் நகராட்சி பொறியாளர் ஜீன் 2023–க்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு – மன்றம் பதிவு செய்யலாம். | தீர்மான எண்–623<br>பதிவு செய்யப்பட்டது. |
| பொருள் எண்..3 | இராமநாதபுரம் நகராட்சி பகுதியில் குடியிருப்புகள், வணிகபகுதிகள், அரசுமற்றும் அரசு சாரா நிறுவனங்களில் பெருமளவு குப்பை உற்பத்தியாளர்களை கண்டறிந்து உரிய அறிவிப்பு வழங்கி மக்கும் குப்பைகளை வளாகத்திலேயே உரமாக்கிடவும், மக்காத குப்பைகளை மறுசுழற்சிக்கு அனுப்பிடும் பொருட்டு தினசரி நாளிதழில் சிறிய அளவில் அறிவிப்பு வெளியிட உத்தேச செலவினம் ரூ.10,000/– வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு –1)பொது சுகாதார அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்–624<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது. |

<table>
<tr>
<td>பொருள் எண்..4</td>
<td>
இராமநாதபுரம் நகராட்சி, 15வது நிதிக்குழு மானியம் 2022–2023ம் நிதியாண்டில் (Tied Grant) தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் வார்டு –4, மதுரை வீராச்சாமி தெருவில் உள்ள சமுதாய கழிப்பறை மராமத்து பணிகள் மேற்கொள்ளும் பணிக்கு ரூ.3.21 இலட்சத்திற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண்.18274/2022/CFC–1 நாள்.18.05.2023ன் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி 27.06.2023ல் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் இணையதளம் வாயிலாக வரப்பெற்றன.<br>
மேற்படி, வரப்பெற்ற இரண்டு<br>
<table>
<tr><th>வ.எண்</th><th>வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிதாரர்களின் பெயர்கள்</th><th>விலை விகிதம் கூடுதல்/குறைவு</th></tr>
<tr><td>1.</td><td>திரு.என்.இளவரசன்<br>ஒப்பந்ததாரர்<br>இராமநாதபுரம்.</td><td>0.01%சதவீதம் மதிப்பீட்டை விட குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>திரு.ஆர்.எஸ்.இராமமூர்த்தி<br>ஒப்பந்ததாரர்<br>இராமநாதபுரம்.</td><td>5.28%சதவீதம் மதிப்பீட்டை விட கூடுதல்</td></tr>
</table>
ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் வழங்கியுள்ள திரு.என்.இளவரசன், ஒப்பந்ததாரர், இராமநாதபுரம் அவர்களது 0.01% மதிப்பீட்டை விட குறைவினை ஏற்று மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு – 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2)மேற்கண்ட பணி திட்டப்பணியாதலால் பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td>தீர்மான எண்–625<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

**பொருள் எண்..5**

இராமநாதபுரம் நகராட்சி, குடிநீர் விநியோகம், இராமநாதபுரம் கூட்டுக்குடிநீர் திட்டம் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் குறைந்த அளவே குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.மேலும் குடிநீர் வரக்கூடிய பிரதான குழாய்களில் ஏற்படும் உடைப்புகளால், அடிக்கடி குடிநீர் விநியோகம் தடைபடுகின்றது.இதனால் நகர் பகுதியில் சீரான குடிநீர் விநியோகம் செய்ய இயலவில்லை.மேலும், தற்போது கோடை காலம் ஆரம்பித்துவிட்டபடியால், குடிநீர் பற்றாக்குறை நகரில் உள்ள அனைத்து வார்டுகளுக்கும் தனியார் லாரி மூலம் தெருக்களில் குடிநீர் விநியோகம் செய்ய வேண்டியுள்ளது. எனவே, அதற்கான உத்தேச செலவினம் ரூ.9.50 இலட்சத்திற்கு பணிகள் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்.592, நாள்.31.05.2023ன் படி ஒப்புதல் அளித்துள்ளதன்படி மேற்கண்ட பணிக்கு 27.06.2023ல் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் இணையதளம் வாயிலாக வரப்பெற்றன.

மேற்படி இரண்டு வரப்பெற்ற

| வ.எண் | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிதாரர்களின் பெயர்கள் | விலை விகிதம் கூடுதல்/குறைவு |
|---|---|---|
| 1. | திரு.எம்.கே.திருமுருகன்<br>ஒப்பந்ததாரர்<br>இராமநாதபுரம். | 0.16%சதவீதம் மதிப்பீட்டை விட குறைவு |
| 2. | திருமதி.பி.நாகேஸ்வரி<br>ஒப்பந்ததாரர்<br>இராமநாதபுரம். | 1.64%சதவீதம் மதிப்பீட்டை விட கூடுதல் |

ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் வழங்கியுள்ள திரு.எம்.கே.திருமுருகன், ஒப்பந்ததாரர், இராமநாதபுரம் அவர்களது 0.16% மதிப்பீட்டை விட குறைவினை ஏற்று மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2)குடிநீர் விநியோகம் அவசர அவசியம் முன்னிட்டு மன்ற அனுமதியை எதிர் நோக்கி, நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1850/2023/இ1)

**தீர்மான எண்–626**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்..6**

இராமநாதபுரம் நகராட்சி, பாதாள சாக்கடை திட்ட பராமரிப்பில் வார்டு எண்.14 முத்துக் கோரக்கி செட்டிய தெரு மற்றும் வார்டு –15 சாயக்காரத் தெருவில் ஆய்வுக் குழியில் இருந்து அடிக்கடி கழிவு நீர் வெளியேறி பெரும் பொது சுகாதார பிரச்சினை ஏற்படுகின்றது. அதற்கு மாற்று ஏற்பாடாக அருகில் உள்ள ஆய்வுக்குழிக்கு Bypass குழாய் பதிக்க வேண்டும். மேலும், அண்ணா நகர் கழிவு நீர் அகற்றும் நிலையத்தில் Grane மற்றும் ஆட்கள் அமர்த்தி மின்மோட்டார் பழுது மற்றும் மராமத்து பணிகள் பார்க்கப்பட வேண்டும். மேலும், பாதாள சாக்கடை திட்ட பராமரிப்பில் Zone–II ல் இருந்து Zone –IIIக்கு செல்லும் பிரதான கழிவு நீர் குழாயில் சாலைத்தெரு பெரியார் ஸ்தூபி

**தீர்மான எண்–627**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

<table>
<tr>
<td></td>
<td>அருகில் கழிவு நீர் வெளியேறுவதற்கு அவ்விடத்தில் ஒரு Champer தொட்டி அமைத்து குழாய் பதித்து மாற்று ஏற்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. மேற்கண்ட பணிகள் மேற்கொள்ளுவதற்கான உத்தேச செலவினம் ரூ.1.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி நாள்.12.06.2023ன் படி ஒப்புதல் அளித்துள்ளதன்படி மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி 27.06.2023ல் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் இணையதளம் வாயிலாக கீழ்க்கண்டவாறு வரப்பெற்றன.<br>
மேற்படி வரப்பெற்ற இரண்டு
<table>
<tr><th>வ.எண்</th><th>வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிதாரர்களின் பெயர்கள்</th><th>விலை விகிதம் கூடுதல்/குறைவு</th></tr>
<tr><td>1.</td><td>திரு.P.சுப்பிரமணி<br>ஒப்பந்ததாரர்<br>இராமநாதபுரம்.</td><td>0.02%சதவீதம் மதிப்பீட்டை விட குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>திரு.ஆர்.எஸ்.இராமமூர்த்தி<br>ஒப்பந்ததாரர்<br>இராமநாதபுரம்.</td><td>2.67%சதவீதம் மதிப்பீட்டை விட கூடுதல்</td></tr>
</table>
ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் வழங்கியுள்ள திரு.P.சுப்பிரமணி, ஒப்பந்ததாரர், இராமநாதபுரம் அவர்களது 0.02% மதிப்பீட்டை விட குறைவினை ஏற்று மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு – 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2)பாதாள சாக்கடை பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>
(ந.க.எண்.2299/2023/இ1)</td>
<td></td>
</tr>
<tr>
<td>பொருள் எண்..7</td>
<td>இராமநாதபுரம் நகராட்சி குடிநீர் விநியோகிக்கப்பட்டு சுமார் 65.50 கி.மீ நீளம் பகிர்மான குழாய் பராமரிக்கப்பட்டு வருகிறது.இவற்றில் அடிக்கடி உடைப்புகள் ஏற்பட்டு விடுகின்றது.மேலும் பகிர்மான குழாயில் கழிவு நீர் கலந்து குடிநீர் மாசு ஏற்பட்டு விடுகின்றது.இவற்றினை உடனுக்குடன் சரி செய்ய வேண்டியுள்ளது. இதற்கு போதிய பணியாளர்கள் இல்லாததால், தனியாக ஒப்பந்தப்புள்ளி மேற்கொண்டு பகிர்மான குழாய் தளவாடப் பொருட்கள் ஆட்களை அமர்த்தி பணிகள் மேற்கொள்ள ஒரு வருட காலத்திற்கு பராமரிப்பு பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூபாய்.6.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு – 1)மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2) இச்செலவினத்தை குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td>தீர்மான எண்–628<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>பொருள் எண்..8</td>
<td>இராமநாதபுரம் நகராட்சி, வார்டு எண்.19, டாக்டர் அம்பேத்கார் நடுத்தெரு(135019L003), அம்பேத்கார் கிழக்கு தெரு (135019L005) மற்றும் வெற்றிலைக்காரத்தெரு 2–வது தெரு (135019S008) ஆகிய தெருக்களில் பேவர்</td>
<td>தீர்மான எண்–629<br>அலுவலக குறிப்பு</td>
</tr>
</table>

<table>
<tr><td></td><td>பிளாக் தளம் அமைப்பதற்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.4.10 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு – 1)மன்றம் அனுமதிக்கலாம்.<br>2)இச்செலவினத்தை பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.2317/2023/இ1)</td><td>அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>பொருள் எண்..9</td><td>இராமநாதபுரம் நகராட்சி பகுதிகளில் டெங்கு விழிப்புணர்வு மற்றும் குப்பைகள் தரம் பிரித்து வழங்குவது தொடர்பாக நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் கடிதம் ந.க.எண்.4313/2021/அ3, நாள்:17.05.2023 தேதியில் திரு.வெங்கடாசலபதி நாடகசபா சார்பாக விழிப்புணர்வு வழங்கிட 30.06.2023 அன்று நமது நகராட்சியின் விதிமுறைகளுக்குட்பட்டு நடத்தி கொள்ள அனுமதியளிக்கப்பட்டதின் பேரில் 30.06.2023 அன்று அரண்மனை பஜார் பகுதியில் நாடகசபா நிறுவனத்தால் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது. எனவே, அதற்கான தொகை ரூ.7500/– வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.2349/23/எச்1)</td><td>தீர்மான எண்–630<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>பொருள் எண்..10</td><td>இராமநாதபுரம் நகராட்சி, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2022–23 இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.காதர்பாட்சா முத்துராமலிங்கம் அவர்கள் பரிந்துரை செய்த பணிக்கு ரூ.14.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, இராமநாதபுரம் அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.ஆர்.4/829/2022, நாள்:11.07.2023–ன் படி கீழ்க்கண்டவாறு உள்ள பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் பொருள் வைக்கப்படுகிறது.<br><table><tr><th>வ.எண்</th><th>பணிகளின் விபரம்</th><th>மதிப்பீட்டுத் தொகை (ரூ) இலட்சத்தில்</th></tr><tr><td>1</td><td>இராமநாதபுரம் நகராட்சி 12–வது வார்டு முத்துராமலிங்க சுவாமி தெற்குத்தெரு தார்ச்சாலை அமைக்கும் பணிக்கு</td><td>5.00</td></tr><tr><td>2</td><td>இராமநாதபுரம் நகராட்சி 21–வது வார்டு கறிக்கடை சந்தில் கோட்டை வாசலில் இருந்து வாலியா கேஸ் வரை பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணிக்கு (200 மீட்டர்)</td><td>9.00</td></tr><tr><td></td><td>மொத்தம்</td><td>14.00</td></tr></table></td><td>தீர்மான எண்–631<br>மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.</td></tr>
</table>

<table>
<tr><td></td><td>அலுவலககுறிப்பு – மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்<br>(ந.க.எண்.1888/2023/இ1)</td><td></td></tr>
<tr><td>பொருள் எண்..11</td><td>தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோயம்புத்தூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.399/2023/அ2, நாள் : 06.07.2023–ன் படி, இராமநாதபுரம் சிறப்புநிலை நகராட்சிக்கு 2023–2024–ம் ஆண்டிற்குரிய பங்களிப்புத்தொகை ரூ.2,00,000/– செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.2224/2022/சி1)</td><td>தீர்மான எண்–632<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>பொருள் எண்..12</td><td>இராமநாதபுரம் நகராட்சிக்கு சொந்தமான பாண்டிக்கண்மாய் சாமி தெருவில் உள்ள கட்டண கழிப்பறை (இனம் 1) மற்றும் பழைய பேருந்து நிலையத்தில் உள்ள புதியதாக கட்டப்பட்டுள்ள கட்டண கழிப்பறையில் (இனம் 2) கட்டணம் வசூல் செய்யும் உரிமம் 2023–2024 முதல் 2025–2026 வரை உரிமம் ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டு காலம் அனுபவித்து கொள்வதற்காக 14.07.2023 அன்று மேற்காணும் இனங்களுக்கு இந்நகராட்சியில் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இனம் 1– ற்கான பாண்டிக்கண்மாய் சாமி தெருவில் உள்ள கட்டண கழிப்பறைக்கு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர யாரும் முன் வரவில்லை. இனம் 2–ற்கான பழைய பேருந்து நிலையத்தில் உள்ள கட்டண கழிப்பறையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு ஏலம் நடைபெற்றதில் கீழ்க்காணும் விவரப்படி ஏலத்தில் இரண்டு நபர்கள் மட்டும் கலந்து கொள்ளப்பட்டு ஏலக் கேள்வி கேட்கப்பட்டுள்ளது.
<table>
<tr><th>வ.எண்</th><th>ஏலத்தில் கலந்து கொண்டவர்களின் பெயர்கள் மற்றும் முகவரி</th><th>ஏலக்கேள்வி தொகை ரூ</th></tr>
<tr><td>1</td><td>திரு. க. சுரேஷ் குமார்<br>த/பெ. கருமலையான்<br>2/38 டி சிறகிக்கோட்டை<br>பரமக்குடி தாலுகா<br>இராமநாதபுரம்.</td><td>8,57,000/–</td></tr>
<tr><td>2</td><td>திரு.கா. கபில் தேவ்<br>த/பெ கார்மேகம்<br>2/110 சிவன் கோவில் தெரு<br>ஆர்.எஸ். மடை<br>இராமநாதபுரம்.</td><td>8,65,000/–</td></tr>
</table></td><td>தீர்மான எண்–633<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது.</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | மேற்காணும் இனத்திற்கு வ.எண்.2 ல் கண்டுள்ள திரு.கா.கபில் தேவ் என்பவர் உயர்ந்த பட்ச ஏலக் கேள்வியாக ரூ.8,65,000/-ற்கு ஏலம் கோரியுள்ளார் என்பதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u>**<br>1. உயர்ந்த பட்ச ஏலக் கேள்வியாக ரூ.8,65,000/-ற்கு கேட்கப்பட்டுள்ள திரு.கா.கபில் தேவ் என்பவரது ஏலக் கேள்வியை மன்றம் ஏற்கலாம்.<br>2.பாண்டிக்கண்மாய் சாமி தெருவில் உள்ள கட்டண கழிப்பறைக்கு மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரலாம்.<br>**(ந.க.எண். 1901/2023/அ1)** | |
| **பொருள் எண்..13** | இராமநாதபுரம் நகராட்சிக்கு சொந்தமான பாண்டிக்கண்மாய் சாமி தெருவில் உள்ள கட்டண கழிப்பறை (இனம் 1) மற்றும் பழைய பேருந்து நிலையத்தில் உள்ள புதியதாக கட்டப்பட்டுள்ள கட்டண கழிப்பறையில் (இனம் 2) கட்டணம் வசூல் செய்யும் உரிமம் 2023-2024 முதல் 2025-2026 வரை உரிமம் ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டு காலம் அனுபவித்து கொள்வதற்காக 14.07.2023 அன்று மேற்காணும் இனங்களுக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரம் செய்யப்பட்ட வகையில் ரூ.19530/-ற்கான பில் பட்டியல் தினசூரியன் செய்தித் தாள் நிறுவனத்திலிருந்து வரப்பெற்றுள்ளது. மேற்காணும் தொகை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.1901/2023/அ1 | **தீர்மான எண்-634**<br>**அலுவலக குறிப்பு**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| **பொருள் எண்..14** | வழக்கு எண்.WP (MD) No. 13005 of 2023 மற்றும் WP (MD) No. 16317 of 2023 சென்னை உயர் நீதிமன்றம் மதுரை கிளையில் நடைபெற்று கொண்டிருக்கின்ற மேற்படி இரண்டு வழக்கிற்கும் வக்காலத்து எதிர் வாக்குமூலம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டவகைக்கு இந்நகர்மன்ற வழக்கறிஞர் திரு.ஏ.கண்ணன் அவர்களிடமிருந்து ரூ.20,000/- மேற்படி வழக்கிற்கான வழக்கு கட்டணம் வழங்கக் கோரி பட்டியல் சமர்ப்பித்துள்ளார். மேற்படி தொகை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண். 1987/2023/அ1)** | **தீர்மான எண்-635**<br>**அலுவலக குறிப்பு**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| **பொருள் எண்..15** | நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட நகர்மன்றத் தலைவர், நகர்மன்றத் துணை தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்களுக்கு மாதந்தோறும் மதிப்பூதியம் வழங்கிட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை அரசாணை எண்.98, நாள்:13.07.2023-ன் படி வெளியிடப்பட்டுள்ள அரசாணை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு – மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். | **தீர்மான எண்-636**<br>**மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.** |

<table>
<tr>
<td>பொருள் எண்..16</td>
<td>இராமநாதபுரம் நகராட்சிக்குட்பட்ட 33 வார்டு பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் வீடுகள் தோறும் குப்பைகள் தரம் பிரித்து வாங்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. 60% வீடுகளில் குப்பைகளை தரம் பிரித்து வழங்குகிறார்கள், மீதமுள்ள வீடுகளின் உரிமையாளர்களுக்கு போதிய விழிப்புணர்வு வழங்கப்பட்டு குப்பைகள் தரம் பிரித்து வாங்கப்பட வேண்டும். விழிப்புணர்வு செய்வதற்கான "மக்கும் குப்பை, மக்காத குப்பை" குறித்த விழிப்புணர்வு நோட்டீஸ் அச்சடிக்க வேண்டியுள்ளது. அரசு உத்திரவு பெற்ற தூத்துக்குடி மாவட்ட ஹை–டெக் பிரிண்டிங் அன்ட் அலைடு சர்வீஸ் இண்டஸ்ட்ரியல் கோ–ஆப்ரேட்டிவ் சொசைட்டி லிமிடெட், IND.N.TUTI.5 என்ற கூட்டுறவு நிறுவனத்திடமிருந்து "மக்கும் குப்பை, மக்காத குப்பை" குறித்த விழிப்புணர்வு நோட்டீஸ் விநியோகம் செய்ய கடிதம் வரப்பெற்றுள்ளது. அதன் படி நகராட்சிக்கு தேவையான 15000 விழிப்புணர்வு நோட்டீஸ்களை அச்சடிக்க அதற்கான உத்தேச செலவினம் ரூ.3,00,000/– வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலககுறிப்பு :–</u>மன்றம்அனுமதிக்கலாம்.</td>
<td>தீர்மான எண்–637<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>பொருள் எண்..17</td>
<td>இராமநாதபுரம் நகராட்சிக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் குடிநீர் விநியோகத்திற்காக மின்மோட்டார்கள் மற்றும் சிறுமின் விசை பம்புகள் பழுதுகள் மேற்கொள்ளும் பணிக்கு ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்.599 நாள்.28.06.2023ன் படி ஒப்புதல் அளித்துள்ளதன்படி மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி 18.07.2023ல் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு வரப்பெற்றன.<br>மேற்படி வரப்பெற்ற இரண்டு
<table>
<tr><th>வ.எண்</th><th>வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிதாரர்களின் பெயர்கள்</th><th>விலை விகிதம் கூடுதல்/குறைவு</th></tr>
<tr><td>1.</td><td>திரு.ஆர்.சரவணன்<br>ஒப்பந்ததாரர்<br>இராமநாதபுரம்.</td><td>0.08%சதவீதம் மதிப்பீட்டை விட குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>திரு.ஆர்.எஸ்.இராமமூர்த்தி<br>ஒப்பந்ததாரர்<br>இராமநாதபுரம்.</td><td>0.40%சதவீதம் மதிப்பீட்டை விட கூடுதல்</td></tr>
</table>
ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் வழங்கியுள்ள "திரு.ஆர்.சரவணன், ஒப்பந்ததாரர், இராமநாதபுரம். " அவர்களது 0.08% மதிப்பீட்டை விட குறைவினை ஏற்று மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு – 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2)குடிநீர் தேவையின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.233/2023/இ1–1)</td>
<td>தீர்மான எண்–638<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td>பொருள் எண்..18</td>
<td>இராமநாதபுரம் நகராட்சி, பாதாள சாக்கடை திட்ட கழிவுநீர் நிலையங்களில் உள்ள ஜெனரேட்டர்களுக்கு புதிய பேட்டரிகள் (Lead Acid) வாங்கி பொருத்தும் பணிக்கு ரூ.1.10 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்.599 நாள்.28.06.2023ன் படி ஒப்புதல் அளித்துள்ளதன்படி மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி 18.07.2023ல் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு வரப்பெற்றன.<br>மேற்படி வரப்பெற்ற இரண்டு<br><br>
<table>
<tr><th>வ.எண்</th><th>வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிதாரர்களின் பெயர்கள்</th><th>விலை விகிதம் கூடுதல்/குறைவு</th></tr>
<tr><td>1.</td><td>திரு.ஆர்.சரவணன்<br>ஒப்பந்ததாரர்<br>இராமநாதபுரம்.</td><td>0.34%சதவீதம் மதிப்பீட்டை விட குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>திரு.ஆர்.எஸ்.இராமமூர்த்தி<br>ஒப்பந்ததாரர்<br>இராமநாதபுரம்.</td><td>0.14%சதவீதம் மதிப்பீட்டை விட கூடுதல்</td></tr>
</table>
<br>ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் வழங்கியுள்ள "திரு.ஆர்.சரவணன், ஒப்பந்ததாரர், இராமநாதபுரம். " அவர்களது 0.34% மதிப்பீட்டை விட குறைவினை ஏற்று மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு – 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2)பாதாள சாக்கடை பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.233/2023/இ1)</td>
<td>தீர்மான எண்–639<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>பொருள் எண்..19</td>
<td>இராமநாதபுரம் நகராட்சி, பாதாள சாக்கடை திட்ட பராமரிப்பு பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் Jet Rodding வாகனம் TN65 L 5536க்கு பழுது நீக்கம் பணி மேற்கொள்ளும் பணிக்கு ரூ.7.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்.568 நாள்.31.05.2023ன் படி ஒப்புதல் அளித்துள்ளதன்படி மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி 18.07.2023ல் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு வரப்பெற்றன.<br><br>
<table>
<tr><th>எண்</th><th>வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிதாரர்களின் பெயர்கள்</th><th>விலை விகிதம் கூடுதல்/குறைவு</th></tr>
<tr><td>1.</td><td>சாய் ராகவேந்திரா இண்டஸ்ட்ரீஸ்<br>ஒப்பந்ததாரர்<br>எண்111A, அம்பத்தூர்</td><td>0.01%சதவீதம் மதிப்பீட்டை விட குறைவு</td></tr>
</table></td>
<td>தீர்மான எண்–640<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
மேற்படி இரண்டு
<table>
<tr><td></td><td>சென்னை</td><td></td></tr>
<tr><td>2.</td><td>அல்ட்ராஜெட் இண்டஸ்டிரியல் கிளீனிங் சிஸ்டெம்ஸ் பிரைவேட் லிமிடெட்<br>15/1 இராமசாமி தெரு<br>சென்னை.</td><td>4.05%சதவீதம் மதிப்பீட்டை விட கூடுதல்</td></tr>
</table>
வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் வழங்கியுள்ள "சாய் ராகவேந்திரா இண்டஸ்ட்ரீஸ், ஒப்பந்ததாரர், சென்னை " அவர்களது 0.01% மதிப்பீட்டை விட குறைவினை ஏற்று மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு – 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2)பாதாள சாக்கடை பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>
(ந.க.எண்.549/2023/இ1)
</td>
<td></td>
</tr>
<tr>
<td>பொருள் எண்..20</td>
<td>இந்நகராட்சி வரி இல்லா இனங்களுக்கு பிடித்தம் செய்யப்பட்ட தொகை அரசுக்கு செலுத்தப்பட வேண்டிய GST எண் பெறுவதற்கு மேல்முறையீடு செய்ததற்குரிய கட்டணம் ரூ.25000/– ஆலயம் அசோசியேட்ஸ் நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td>தீர்மான எண்–641<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>பொருள் எண்..21</td>
<td>இராமநாதபுரம் நகராட்சி, புதிய பேருந்து நிலைய மேம்பாட்டிற்காக பழுதடைந்த பழைய கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்தப்பட உள்ள கட்டிடங்களில் உள்ள மீண்டும் உபயோகப்படுத்தக்கூடிய பொருட்களுக்கு 19.07.2023–ந் தேதி அன்று இந்நகராட்சியில் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 2 நபர்கள் கீழ்க்காணும் விபரப்படி ஏலக்கேள்வி கோரியுள்ளார்கள்.
<table>
<tr><th>வ.எண்</th><th>ஏலதாரர் பெயர் மற்றும் முகவரி</th><th>ஏலக்கேள்வி தொகை (ரூ)</th></tr>
<tr><td>1</td><td>திரு.எஸ்.எம்.கார்த்திகேயன்,<br>ஒப்பந்ததாரர்,<br>எண்.1 மாரியம்மன் கோவில் தெரு,<br>இராமநாதபுரம்.</td><td>5,70,000/–</td></tr>
</table>
</td>
<td>தீர்மான எண்–642<br>பொருள் எண் – 21ல் மேற்காணும் வ.எண்.2ல் உள்ள திரு.எஸ்.முனியசாமி என்பவரை விட வரிசை எண்.1–ல் உள்ள திரு.எஸ்.எம்.கார்த்திகேயன் உயர்ந்தபட்ச ஏலக் கேள்வியாக ரூ.5,70,000/–ற்கு ஏலம் கோரியுள்ளார் என்பதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>2)அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>2</td><td>திரு.எஸ்.முனியசாமி,<br>ஒப்பந்ததாரர்,<br>எண்.1/4, மாரியம்மன் கோவில் தெரு,<br>இராமநாதபுரம்.</td><td>5,68,000/-</td></tr>
</table>
மேற்காணும் வ.எண்.1ல் உள்ள திரு.எஸ்.எம்.கார்த்திகேயன் என்பவரை விட உயர்ந்தபட்ச ஏலக் கேள்வியாக ரூ.5,70,000/-ற்கு ஏலம் கோரியுள்ளார் என்பதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>
அலுவலககுறிப்பு – 1)மன்றம் அனுமதிக்கலாம்<br>
2)உயர்ந்தபட்ச ஏலக்கேள்வியாக ரூ.5,70,000/-ற்கு கேட்கப்பட்டுள்ள திரு.எஸ்.எம்.கார்த்திகேயன் என்பவரது ஏலக்கேள்வியை மன்றம் ஏற்கலாம்.<br>
(ந.க.எண்.2332/2022/இ1)
</td>
<td></td>
</tr>
<tr>
<td>பொருள் எண்..22</td>
<td>
இராமநாதபுரம் நகராட்சி, பாதாள சாக்கடை திட்டம், அரசாணை எண்.408 (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை) நாள் : 07.10.2005-ல் நிர்வாக அனுமதி ரூ.30.00 கோடிக்கும், அதனைத் தொடர்ந்து திருத்திய நிர்வாக அனுமதி அரசாணை எண்.550 (MAWS) நாள் : 30.12.2009ன் படி ரூ.31.51 கோடிக்கும் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி திட்டம் – TNUDP-III மூலம் அனுமதியளிக்கப்பட்டது.<br>
இத்திட்டம் தமிழ்நாடு வடிகால் வாரியத்தால் செய்து முடிக்கப்பட்டு, 11.06.2013 முதல் துவக்கி வைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தில் 5 கழிவுநீர் அகற்றும் நிலையங்களும், 2 சிறிய கழிவுநீர் அகற்றும் நிலையங்களும் உள்ளன. மேலும், இத்திட்டத்தில் 64.385 கி.மீட்டர் கழிவுநீர் குழாய்கள், 2160 மனித ஆய்வுக்குழிகள், சுமார் 10.50 கி.மீட்டர் நீளம் பிரதான கழிவுநீர் குழாய்கள், 12250 பாதாள சாக்கடை இணைப்புகள், 7.10 எம்.எல்.டி கொள்ளளவு கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் என்ற கட்டமைப்புகளுடன் இத்திட்டம் நகராட்சியில் பராமரிக்கப்பட்டு வருகின்றது.<br>
மேலும், இத்திட்ட பராமரிப்பில் இரண்டு Jet Rodding வாகனம் மற்றும் ஒரு Robotic எந்திரம் மற்றும் ஒரு கழிவுநீர் அகற்றும் வாகனம் என்ற தளவாடங்களுடன் பராமரிக்கப்பட்டு வருகின்றது.<br>
மேலும், இத்திட்டத்தின் கீழ் 450 குதிரை திறனுக்கும் (HP) அதிகமான மொத்தம் 41 மின் மோட்டார்கள் பயன்படுத்தப்படுகிறது. கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் Inlet, Grit Champer, Primary ClarrifierUnit I, II, Secondary Clarrifier Unit I, II, Chlorine Tank, Sullage Thickne, Centrifuge Pump, Getset Arrangement மற்றும் Chemical Lab என்ற கட்டமைப்புகளுடன் இயக்கப்பட வேண்டியுள்ளது. மேலும், Online Continues Effluent Monitoring System என்ற கழிவுநீர் தரம் கண்காணிப்பு அமைப்பும் செயல்படுத்தப்பட உள்ளது.<br><br>
இந்த பாதாள சாக்கடை தினசரி பராமரிப்பு பணிகளில் கழிவுநீர் அடைப்பு சரி செய்தல், அனைத்து கழிவுநீர் அகற்று நிலையங்களிலும் இரவு பகல் மின் மோட்டார் இயக்குதல், Jet Rodding மற்றும் Robotic எந்திரம் இயக்குதல் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் மின் மோட்டார் இயக்குதல், ஆய்வகப்பணி மற்றும் காவலர்
</td>
<td>தீர்மான எண்-643<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | பணிகள் தினசரி மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேலும் சிறிய அளவிலான மின் மோட்டார் பழுது பணிகளும், கழிவுநீர் குழாய் (Sewer Line) பிரதான குழாய் சிறிய உடைப்புகள் பணிகளும் பார்க்கப்பட வேண்டியுள்ளது.<br>இத்திட்டத்திற்கான போதிய பராமரிப்பிற்கு தனியாக பணியாளர்கள் நியமனம் செய்யப்படவில்லை. இத்திட்டத்திற்கு போதிய பராமரிப்பு மற்றும் இயக்குதல் பணியாளர்கள் இல்லாததால் தினசரி பாதாள சாக்கடை சம்மந்தமான புகார்கள் வந்த வண்ணம் உள்ளது. இதனை தவிர்க்கும் பொருட்டு தற்காலிகமாக வெளிக்கொணர்வு முறையில் தனியார் பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் பராமரிப்பு பணிக்கு எடுக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.<br>எனவே, தகுதியான தொழில் நுட்ப பணியாளர்கள் மற்றும் நபர்களை கொண்டு மேலும் இத்திட்டத்தினை நல்ல முறையில் பராமரித்திட வேண்டியதின் அவசியம் பொருட்டு, இத்திட்ட இயக்குதல் மற்றும் பராமரிப்பினை, (கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் உட்பட) தனியார் மயமாக்கவும் (Operartion and Maintenance of Seweage Pumping Stations (3 Shifts), Seweage Collection Systyem and Seweage Treatment Plant) அதற்கான உரிய திட்ட அறிக்கை தயார் செய்து முன் இசைவு (Principle Clearance) வேண்டி, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்கவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு – 1)மன்றம் அனுமதிக்கலாம்.<br>2)பாதாள சாக்கடை திட்ட பராமரிப்பு அவசியம் முன்னிட்டு திட்டப் பிரேரணை தயார் செய்து முன் இசைவு (Principle Clearance) வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.2543/2023/இ1) | |
| பொருள் எண்..23 | மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.948/2017/அ1, நாள்.19.01.2018–ன் படி முன்னாள் படை வீரர்களின் நலனுக்காக, படை வீரர் கொடி வில்லைகளுக்கு வசூல் செய்து நகராட்சி செலுத்த வேண்டியுள்ளதால், இந்நகராட்சி அனைத்துப் பிரிவுகளிலும் வரக் கூடிய விண்ணப்பங்களுக்கு கொடி நாள் வில்லைகளுக்கென கீழே குறிப்பிட்டுள்ள விலை நிர்ணய பட்டியலின் படி வசூல் செய்திட மன்றத்தில் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br><br>(ரூ.)<br>சொத்துவரி பெயர் மாற்றுக் கட்டணம் – 100<br>சொத்துவரி விதிப்பு – 100<br>பிறப்பு இறப்பு சான்று – 25<br>கட்டிட அனுமதி – 200<br>புதிய குடிநீர் குழாய் இணைப்பு – 100<br>அச்சு சுவடுகள் (D&O) – 100<br>திடக்கழிவு மேலாண்மை – 100 | தீர்மான எண்–644<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | மனை வரன் முறை - 200<br>நிலப்பதிவேடு அடங்கல் - 100<br>UGD பாதாள சாக்கடை - 100<br>அலுவலககுறிப்பு – 1)மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண்.3503/2014/பி2) | |
| பொருள் எண்..24 | இந்நகராட்சி பேருந்து நிலையம் இடிக்கப்பட்டு புதிய பேருந்து நிலையம் கட்டுமானப் பணிகள் தொடங்கியுள்ளதால் அங்கு வியாபாரம் செய்த கடை வியாபாரிகள் நலச் சங்க தலைவர் கேட்டுக்கொண்டதன் பேரில் அவர்களுக்கு பழைய பேருந்து நிலையத்தில் தற்காலிக கடை அமைத்து வியாபாரம் செய்வதற்கு 28.06.2023 அன்று நடத்தப்பட்ட இந்நகர்மன்ற கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. (தீர்மானம் எண்.617) அதன் அடிப்படையில் இந்நகராட்சி நகரமைப்பு ஆய்வாளரால் இடம் நேராய்வு செய்யப்பட்டு ஒரு கடைக்கு 10x8 என்ற அளவில் 11 கடைகளுக்காக இடம் ஒதுக்கீடு செய்யலாம் என அறிக்கை அளித்துள்ளார். மேலும் இநநகராட்சி வருவாய் ஆய்வாளர் மேற்கண்ட 11 கடைகளுக்கான இடங்களுக்கு ஒரு வருட காலத்திற்கு மட்டும் கடைக்கான இடம் ஒன்றிற்கு மாத வாடகையாக ரூ.3170/– (வரிகள் தவிர்த்து) வாடகை நிர்ணயம் செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளார். எனவே மேற்காணும் வாடகையை நிர்ணயம் செய்ய மன்ற அனுமதிக்கு.<br>அலுவலக குறிப்பு – 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 1901/2023/அ1) | தீர்மான எண்–645<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்..25 | இராமநாதபுரம் நகராட்சிக்குட்பட்ட 33 வார்டு பகுதிகளில் 53 டெங்கு தடுப்பு பணியாளர்களை கொண்டு வீடுதோறும் டெங்கு தடுப்பு பணிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கண்ட மகளிர் சுய உதவி குழுவிற்கு வழங்கப்பட்ட பணி உத்தரவு இந்த மாதத்துடன் (ஜீலை) முடிவடைகிறது. தற்போது வடகிழக்கு பருவமழை முடிந்துவிட்ட காரணத்தினாலும் தொடர்ந்து காய்ச்சல் பாதிப்புகள் வந்த வண்ணம் இருப்பதால் தீவிரமாக டெங்கு தடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. எனவே அங்கீகரிக்கப்பட்ட மகளிர் சுய உதவி குழுக்கள் மூலமாக பணிகள் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளவும் அதற்கு மூன்று மாத காலத்திற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.15,00,000/– இலட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு – 1) மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்–646<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்..26 | இராமநாதபுரம் நகராட்சி, பொது சுகாதார பிரிவில் கணிணி பயன்பாடு முக்கியத்துவமாக உள்ள காரணத்தால் தட்டச்சு பணியாளர் இல்லாத காரணத்தால் தட்டச்சர் ஒருவரை தினக்கூலி அடிப்படையில் ஒரு வருட காலத்திற்கு பணிமேற்கொள்ள அமர்த்தும் பணிக்கு ரூ.2.56 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்.600 நாள்.28.06.2023ன் படி ஒப்புதல் அளித்துள்ளதன்படி மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி 21.07.2023ல் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு வரப்பெற்றன. | தீர்மான எண்–647<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது. |

<table>
<tr>
<td></td>
<td>
மேற்படி வரப்பெற்ற இரண்டு
<table>
<tr><th>வ.எண்</th><th>வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிதாரர்களின் பெயர்கள்</th><th>விலை விகிதம் கூடுதல்/குறைவு</th></tr>
<tr><td>1.</td><td>அலர்ட் செக்யூரிட்டி சர்வீசஸ்<br>எண்–106, சவுரி முத்து தெரு,<br>ரெட் பீல்ட்ஸ் ரோடு<br>கோயம்புத்தூர்–641045</td><td>0.10%சதவீதம் மதிப்பீட்டை விட குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>நர்மதா செக்யூரிட்டி மற்றும் பெசிலிட்டி மேனேஜ்மென்ட் சர்வீசஸ்<br>கோயம்புத்தூர்.</td><td>2.72%சதவீதம் மதிப்பீட்டை விட கூடுதல்</td></tr>
</table>
ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் வழங்கியுள்ள "அலர்ட் செக்யூரிட்டி சர்வீசஸ், ஒப்பந்ததாரர் கோயம்புத்தூர் " அவர்களது 0.10% மதிப்பீட்டை விட குறைவினை ஏற்று மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு – 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>
ந.க.எண்.2354/2023/எச்1
</td>
<td></td>
</tr>
<tr>
<td>பொருள் எண்..27</td>
<td>
இராமநாதபுரம் நகராட்சி, பொது சுகாதார பிரிவில் பொக்லைன் வாகனத்தை இயக்குவதற்கு போதிய பணியாளர் இல்லாத காரணத்தால் ஒரு வருட காலத்திற்கு பொக்லைன் ஆப்ரேட்டர் ஒருவரை தினக்கூலி அடிப்படையில் அமர்த்தும் பணிக்கு ரூ.2.62 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்.604 நாள்.28.06.2023ன் படி ஒப்புதல் அளித்துள்ளதன்படி மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி 21.07.2023ல் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு வரப்பெற்றன.
<table>
<tr><th>வ.எண்</th><th>வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிதாரர்களின் பெயர்கள்</th><th>விலை விகிதம் கூடுதல்/குறைவு</th></tr>
<tr><td>1.</td><td>அலர்ட் செக்யூரிட்டி சர்வீசஸ்<br>எண்–106, சவுரி முத்து தெரு,<br>ரெட் பீல்ட்ஸ் ரோடு<br>கோயம்புத்தூர்–641045</td><td>0.06%சதவீதம் மதிப்பீட்டை விட குறைவு</td></tr>
</table>
</td>
<td>தீர்மான எண்–648<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

மேற்படி இரண்டு வரப்பெற்ற

| | | |
|---|---|---|
| 2. | நர்மதா செக்யூரிட்டி மற்றும் பெசிலிட்டி மேனேஜ்மென்ட் சர்வீசஸ் கோயம்புத்தூர். | 4.77%சதவீதம் மதிப்பீட்டை விட கூடுதல் |

ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் வழங்கியுள்ள "அலர்ட் செக்யூரிட்டி சர்வீசஸ், ஒப்பந்ததாரர் கோயம்புத்தூர்,அவர்களது 0.06% மதிப்பீட்டை விட குறைவினை ஏற்று மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – 1) மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2411/2023/எச்1

**பொருள் எண்..28**

இராமநாதபுரம் நகராட்சியில், பொது சுகாதார பிரிவில் தேவைப்படும் வாகனத்தில் இயங்கும் கொசு ஒழிப்பு இயந்திரம், முதிர்கொசு ஒழிப்பு Outdoor Foging இயந்திரம், வீட்டின் உட்புறம் பயன்படுத்தும் Indoor Fogging–ற்கு பயன்படுத்தும் Gas Cylinder விநியோகம் செய்யும் பணிக்கு ரூ.9.50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்.506 நாள்.06.04.2023ன் படி ஒப்புதல் அளித்துள்ளதன்படி மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி 21.07.2023ல் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு வரப்பெற்றன.

மேற்படி இரண்டு வரப்பெற்ற

| .எண் | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிதாரர்களின் பெயர்கள் | விலை விகிதம் கூடுதல்/குறைவு |
|---|---|---|
| 1. | சிஸ்டம் இன்ஜினியரிங், எண்–1 அன்னை சத்யா நகர் மெயின் ரோடு, செந்தமிழ் நகர், ராமாபுரம், சென்னை. | 1.32% சதவீதம் மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | எஸ்.என்.எண்டர்பிரைசஸ் பிளாட் நம்பர்.6 கதவு எண்–1 இராஜாஜி அவின்யூ வலசரவாக்கம், சென்னை–600 087 | 0.48% சதவீதம் மதிப்பீட்டை விட குறைவு |

ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் வழங்கியுள்ள "சிஸ்டம் இன்ஜினியரிங், ஒப்பந்ததாரர், சென்னை " அவர்களது 1.32% மதிப்பீட்டை விட குறைவினை ஏற்று மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

தீர்மான எண்–649
அலுவலக குறிப்பு
அனுமதிக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| | அலுவலக குறிப்பு – 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.222/2023/எச்1 | |

(ஒப்பம்) கு.கார்மேகம்,
நகர்மன்றத்தலைவர்,
இராமநாதபுரம் நகராட்சி.